**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.28** **நாள்: 05.04.2024**

**வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு 07.04.2024 அன்று நடத்தப்படும் இரண்டாம் பயிற்சி வகுப்பில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.**

**பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளாத வாக்குச்சாவடி அலுவலர்கள் மீது தேர்தல் நடத்தை விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024 வரும் 19.04.2024 அன்று தமிழ்நாட்டில் நடைபெறவுள்ளது. அதனடிப்படையில், சென்னையில் சென்னை வடக்கு, சென்னை தெற்கு மற்றும் சென்னை மத்தியம் ஆகிய 3 நாடாளுமன்றத் தொகுதிகளில் 19.04.2024 அன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் 16 சட்டமன்றத் தொகுதிகளில் 3,726 வாக்குச்சாவடிகள் பயன்படுத்தப்படவுள்ளன. இந்த வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்பானது வருகின்ற 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கீழ்கண்ட 16 மையங்களில் நடைபெறவுள்ளது.

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | பயிற்சி மையங்கள் |
|---|---|---|
| 1. | 11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | அரசு பாலிடெக்னிக் கல்லூரி, ராதாகிருஷ்ணன் நகர், தண்டையார்பேட்டை, சென்னை-81. |
| 2. | 12. பெரம்பூர் | டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி எண்.45, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, வியாசர்பாடி, சென்னை-39 |
| 3. | 13. கொளத்தூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, எண்.38-42, பந்தர்கார்டன், சென்னை-11 |
| 4. | 14. வில்லிவாக்கம் | ஐ.சி.எப். மெட்ரிகுலேஷன் உயர்நிலைப்பள்ளி, எண்.4629, ஐ.சி.எப். வடக்கு காலனி, கொன்னூர், சென்னை-38 |
| 5. | 15. திரு.வி.க.நகர் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி எண்.20, பள்ளிச்சாலை, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை-11 |
| 6. | 16. எழும்பூர் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி எண்.3, இராட்லர் தெரு, சூளை, சென்னை-112 |
| 7. | 17. இராயபுரம் | புனித பீட்டர் உயர்நிலைப்பள்ளி, மேற்கு மாதா சர்ச் சாலை, இராயபுரம், சென்னை-13 |

| | | |
|---|---|---|
| 8. | 18. துறைமுகம் | பாரதி அரசு கலைக்கல்லூரி,<br>எண்.1, பிரகாசம் சாலை, ஏழுகிணறு,<br>சென்னை-180 |
| 9. | 19. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | என்.கே.டி. பெண்கள் உயர்நிலைப்பள்ளி,<br>டாக்டர் பெசன்ட் சாலை, சேப்பாக்கம்,<br>சென்னை-5 |
| 10. | 20. ஆயிரம்விளக்கு | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>பள்ளிச்சாலை, நுங்கம்பாக்கம்,<br>சென்னை-34 |
| 11. | 21. அண்ணாநகர் | டி.ஜி. வைஷ்ணவா கலைக்கல்லூரி,<br>ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலை,<br>எஸ்.பி.ஐ. அலுவலர் காலனி, அரும்பாக்கம்,<br>சென்னை-106 |
| 12. | 22. விருகம்பாக்கம் | மீனாட்சி பொறியியல் கல்லூரி,<br>12 வேம்புலியம்மன் கோவில் தெரு,<br>அண்ணாஜி நகர், கே.கே.நகர் மேற்கு,<br>விருகம்பாக்கம், சென்னை-78 |
| 13. | 23. சைதாப்பேட்டை | அரசு ஆண்கள் கலைக்கல்லூரி<br>நந்தனம், அண்ணாசாலை, சென்னை-41 |
| 14. | 24. தியாகராயநகர் | அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி<br>எண்.13, 54வது தெரு, 9வது அவென்யூ,<br>அசோக் நகர், சென்னை-83 |
| 15. | 25. மயிலாப்பூர் | இராணி மெய்யம்மை பெண்கள் மேல்நிலைப்பள்ளி<br>எண்.162, ஆர்.கே.மட் சாலை, மந்தைவெளி,<br>சென்னை-22 |
| 16. | 26. வேளச்சேரி | சென்னை உயர்நிலைப்பள்ளி<br>பாரதிதாசன் தெரு, திருவான்மியூர்,<br>சென்னை-41 |

மேற்படி, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பிற்கான ஆணைகள் நேரடியாகவும், குறுஞ்செய்தி வாயிலாகவும் உரிய அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், 07.04.2024 அன்று நடைபெறும் இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்பில் வாக்குச்சாவடி அலுவலர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்றும், பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளாத வாக்குச்சாவடி அலுவலர்கள் மீது தேர்தல் நடத்தை விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களும், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்களும் தெரிவித்துள்ளனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**